Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

கர்த்தரைத் தேடுகிறவர்களோ
சகலத்தையும் அறிவார்கள்
– நீதிமொழிகள் 28:5

நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று
சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்
– I யோவான் 2:20

உம்முடைய கட்டளைகளை
நான் கைக்கொண்டிருக்கிறபடியால்
முதியோர்களைப்பார்க்கிலும்
ஞானமுள்ளவனாயிருக்கிறேன்
– சங்கீதம் 119:100

யோசேப்போடுகூட இருந்த கர்த்தர்,
உங்களோடுகூட இருக்கிறார்.

நம்மைக் குறித்த தரிசனத்தை
நாம் சிந்தனையில் காணும்போது,
நிச்சயமாக அதை அடைவோம்.

இயேசுவின் நாமத்தைச் சொல்லி
ஜெபிக்க மறவாதிருங்கள்.

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony, Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah, Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# மினி எக்காளம்

VOL . 3 ISSUE . 6 தனிப்பிரதி ரூ 20/= ஜனவரி 2010



# நம்மை உயர்த்தும் தேவன்

நிஜா கென்னடி

துஷ்டர் நியாயத்தை அறியார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்.

- நீதிமொழிகள் 28:5

மற்றவர்களுக்கு துன்பத்தை உண்டாக்கக் கூடிய தீயவர்கள் நியாயத்தைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆனால், கர்த்தரை நேசிப்பவர்கள் நியாயத்தை அறிவார்கள். நம் தேவன் நீதியுள்ளவர். ஆதலால் நம் தேவனைப்போல நாமும் நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டும் *(1 யோவான் 3:7)*. யாரெல்லாம் கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கிறார்களோ, அவர்களெல்லோரும் நீதியுள்ளவர்களாயிருப்பார்கள். மற்றவர்களிடம் நியாயமாக நடந்து கொள்வார்கள். அவர்கள் மற்றவர்கள் வாழ்க்கையில் நடக்கும் காரியங்களில் அக்கரையுள்ளவர்களாயிருப்பார்கள். மற்றவர்கள் கஷ்டப்படும்போதும், அவர்கள் பார்த்து சும்மா இருந்து கொண்டிருக்கமாட்டார்கள். அவர்களுக்கு எப்படியாவது உதவி செய்து, நீதியை கிடைக்கச் செய்வார்கள். நம்முடைய சுயநலத்துக்காக சுய ஆதாயத்துக்காக மற்றவர்களை கஷ்டப்படுத்துவதற்கு நாம் பங்காளியாயிருக்கக் கூடாது. மற்றவர்களுக்கு அநீதி செய்பவர்களுக்கு நாம் ஒருபோதும் உதவி செய்யக்கூடாது. பிரியமானவர்களே, நேர்மையாகவும் நியாயமாகவும் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்ற உறுதியோடிருங்கள்.

மிருக குணமுள்ள மனுஷன் அதை அறியான்; மூடன் அதை உணரான்.

- சங்கீதம் 92:6



நியாயமான முறையில் சிந்திக்கும் ஆற்றலில்லாதவர்கள் விவேகம் இல்லாதவர்கள். கர்த்தரை தேடுவதால் வரும் பலனையும் ஆசீர்வாதங்களையும் புரிந்து கொள்ளும் திறனில்லாதவர்கள். கர்த்தருடைய வார்த்தையின் வல்லமையையும், அவருடைய கிருபையையும் உணர்ந்து கொள்ளும் ஞானமில்லாதவர்கள். கர்த்தரை ஏன் தேட வேண்டும், அவரை ஏன் துதித்து பாடவேண்டும் என்ற அறிவில்லாமல் இருப்பவர்கள். சிந்திக்காமல் செயல்படுபவர்கள், கர்த்தருக்கு ஏன் நன்றி செலுத்த வேண்டும், ஏன் உண்மை யுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளமாட்டார்கள்.

**தனக்குள்ள ஆற்றல், அறிவெல்லாம் கர்த்தர் கொடுத்தவை என்று அறியாதிருக் கிறார்கள்**

கர்த்தாவே, என் வாயின் உற்சாகபலிகளை நீர் அங்கீகரித்து, உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும்.

- சங்கீதம் 119:108

கர்த்தரை அறியாதவர்கள், மற்றவர்களை அவமதித்து, இழிவாக நடத்தி, மனதை புண்படுத்தும் முறையில் இரக்கமற்று நடப்பவர்களாகவும், நாகரீகமற்ற முறையில், பண்பற்ற வகையில் நடந்து கொள்ளும் மனநிலையோடு இருப்பார்கள். இவர்கள் தன்னைத்தான் நம்பியுள்ளவர்கள். தன்னுடைய ஆற்றல்கள், தன்னுடைய அறிவில் நம்பிக்கையுள்ளவர்கள். தனக்குள்ள ஆற்றல், அறிவெல்லாம் கர்த்தர் கொடுத்தவை என்று அறியாதிருக்கிறார்கள்.

தீய காரியங்களை செய்பவர்கள் நன்றாக வாழ்வதைக் கண்டு, நாம் சோர்ந்து போகக்கூடாது. அவர்கள்விரைவில் வாடி மடிந்து போகும் புல்லைப்போல அழிந்து போவார்கள் *(சங்கீதம் 9:7)*. இவ்வுலகச் செல்வம், பதவி, புகழ் எல்லாம் அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு சமாதானம் இருக்காது. பாவத்திலிருந்து விடுதலை பெறாமல், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமில்லாமல் இருப்பார்கள். இவ்வுலகத்தை விட்டு கடந்து செல்லும்போது, நரகத்திற்கு போவார்கள்.

பகுத்தறிவு இல்லாமல் நடந்து கொள்வதே மிருக குணம். நன்மை, தீமை என்று பகுத்தறியாதவர்கள். இவர்கள் நியாயத்தை அறியாதிருக்கிறார்கள். சத்தியத்தை அறியாததினால், அக்கிரமஞ்செய்து, கர்த்தருக்கு சத்துருக்களாய் இருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் தொல்லைகள், ஆபத்துகள், பயங்கரங்கள் வந்து ஒரு நிமிடத்தில் பாழாய்போய் நிர்மூலமாகிவிடுவார்கள் *(சங்கீதம் 73:8-20)* துன்மார்க்கனுக்கு நல்ல முடிவு இல்லை *(ஏசாயா 58:23)*.

துன்மார்க்கர் நியாயஞ்செய்ய மனதில்லாதிருக்கிறபடியால்,
அவர்கள் பாழ்கடிக்கப்பட்டுப்போவார்கள்.

- நீதிமொழிகள் 21:7

தீமையான காரியங்களைச் செய்பவர்கள் நியாயமில்லாமல் நடக்கிறார்கள். சரியான காரியங்களைச் செய்ய மறுக்கிறார்கள். அவர்களின் தீய செயல்களே அவர்களை அழித்துவிடும். மற்றவர்களுக்கு துன்பம் கொடுத்ததினால், அவர்கள் வாழ்க்கையில் துன்பங்களும் கஷ்டங்களும் வரும். வாழ்க்கையில் முன்னேறாதபடி பல தடைகளும், இடையூறுகளும் வரும். பிரியமானவர்களே, மற்றவர்களை நியாயமின்றி நடத்தியிருந்தாலோ, மற்றவர்களுக்குரியதை நியாயமில்லாமல் எடுத்து அவர்களை வேதனைப்படுத்தியிருந்தாலோ இன்றே மனந்திரும்புவோம்.

## மன்னித்து மறக்கிறவர்

நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையால் மன்னித்து, அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

- எபிரெயர் 8:12

நம் தேவன் இரக்கமுள்ளவர். எவ்வளவு பெரிய பாவங்களையும் தேவன் அவருடைய இரத்தத்தினால் கழுவி நம்மை சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி விடுகிறார். நாம் மனம் திரும்பும்போது, அந்த பாவங்களை தேவன் மன்னித்து, இனி அவைகளை நினையாதிருப்பேன் என்று கூறுகிறார்.

இந்த உலகத்தில் கடந்த நாட்களில், கடந்த மாதத்தில் கடந்த வருடத்தில் நம்மோடுகூட இருந்த அநேகர் இன்று உயிருடன் இல்லை. அவர்கள் கஷ்டப்பட்டு பிரயாசப்பட்டு சேர்த்து வைத்த ஆஸ்திகளையோ, பணத்தையோ, பொருட்களையோ ஒன்றையும்கூட கொண்டு போகவில்லை. ஆதலால் உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்றிருங்கள். கர்த்தர் கொடுத்தவற்றில் திருப்தியோடு, சமாதானமாக சந்தோஷமாக நிம்மதியோடு இருக்க கற்றுக் கொள்ளுங்கள். நியாயமின்றி பிறருக்குரியதை வஞ்சித்து, பிறரை ஏமாற்றி, பணத்தை சேர்த்தால் கர்த்தரிடமிருந்து வரும் ஆசீர்வாதத்தை இழந்து போவீர்கள். நாம் தேவனைப்போல நீதியோடும் நியாயத்தோடும் வாழ கற்றுக் கொள்ளவேண்டும்.

அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது. நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும்.

*- நீதிமொழிகள் 10:2*

அநியாயமாக பணத்தை சம்பாதிப்பது பாவம், இந்த பாவத்திற்கு தண்டனை



மரணம்தான், நியாயமான முறையில் பணத்தை சம்பாதிப்பது, நம்மை மரணத்திலிருந்து விலக்கி பாதுகாக்கும். கர்த்தரை நேசித்து, அவரை தேடுகிறவர்கள், கர்த்தருக்கு எது பிரியமானது என்பதை, வேதத்தை தியானிப்பதன் மூலமாக தெரிந்து கொண்டு அதன்படி நடப்பார்கள். பரிபூரணமான நிறைவான, நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் மேலான ஆசீர்வாதங்களை, கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வார்கள். இதுவே உண்மையான ஆசீர்வாதம். எப்படி அந்த ஆசீர்வாதம் தங்களுக்கு நியாயமான முறையில் வந்தது என்பதை அறிந்து கொள்வார்கள். (நீதிமொழிகள் *8:20:21*) அவர்களுக்குள் குற்றமனசாட்சி இருக்காது. ஏனென்றால் அவர்களுடைய ஆசீர்வாதமெல்லாம் நியாயமாய் அவர்கள் பட்ட பிரயாசத்திற்கான பலன். அவர்கள் நியாயத்தையும், நீதியையும் நிதானத்தையும், சகல நல்வழிகளையும் அறிந்து கொள்வார்கள்.

கர்த்தரை தேடுகிறவர்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பியிருப்பார்கள். கர்த்தரை ருசித்துப் பார்த்து, அவருக்குள் வாழும் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் நல்லவராக இருக்கிறார். அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும், கர்த்தர் அவற்றிலிருந்து விடுவித்து, பாதுகாத்து, பராமரிப்பார். கர்த்தரை தேடாமல், அவருக்கு பிரியமல்லாத ஒரு வாழ்க்கை வாழ்பவர்கள், செழிப்போடு இருக்கும்போது, நீதிமான்கள் வாழ்க்கையில் குறைவு ஏற்படலாம். ஆனால், கர்த்தரை தேடுகிறவர்களுக்கும், கர்த்தரை தேடாதவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காணலாம். நீதிமானை கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார். துன்மார்க்கனின் முடிவோ அழிவு நீதிமானின் முடிவோ நித்தியஜீவன் (ஏசாயா *58:2,3*).

துன்மார்க்கன் தன் ஆஸ்தியை பெருகப் பண்ணுகிறான். தேவன் நம்மை ஆஸ்தியை பெருகப் பண்ணுவதற்காக சிருஷ்டிக்கவில்லை. அது தேவனுடைய நோக்கமுமல்ல. தம்முடைய பிள்ளைகள் குறைவில்லாமல் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் நமது ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும். அதைக் கெடுத்து விட்டு ஆஸ்தியைப் பெருக்கி ஒரு பிரயோஜனமும் இல்லை (*1* யோவான் *2:15-17*). இந்த உலகத்தின் செல்வங்கள் கவர்ச்சிகரமானது. ஆனால் செல்வங்கள் அழிந்து போகும்; கர்த்தரை அண்டிக் கொண்டிருப்பதே உண்மையான ஆதாயமாகும். அநேகர் தங்கள் நம்பிக்கையை, சந்தோஷத்தை உறுதியை ஆஸ்தியின் மேலும் பணத்தின் மேலும் வைத்திருக்கிறார்கள். உங்கள் நம்பிக்கை கர்த்தர் மேல் இருக்கட்டும்.

## சகலத்தையும் அறியும் அறிவு

நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

*- 1 யோவான் 2:20*

பெயரளவில் கிறிஸ்தவனாக வாழ்ந்து வந்த ஒரு சகோதரன், இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார். வாஞ்சையோடு வேதத்தை வாசித்து தியானிக்க ஆரம்பித்தார். கர்த்தரே வேதவாக்கியங்களின் விளக்கத்தை அவருக்கு கற்றுக் கொடுத்து போதித்தார். தொடர்ந்து வார்த்தையை வாசித்து தியானித்து கொண்டிருந்ததால், கர்த்தர் அவரோடுகூட பேசினார். கர்த்தருடைய சத்தத்தை கேட்க ஆரம்பித்தார். அநேகருக்கு கர்த்தர் அவர் மூலமாக பேசினார். பரிசுத்த ஆவியின் வரங்களினால் அவரை நிரப்பினார். அநேக குடும்பங்களுக்கும், தனி நபர்களுக்கும் ஆறுதலின் பாத்திரமாக கர்த்தர் அவரை பயன்படுத்தினார். அவரது குடும்பத்தார் நியாயமின்றி நடந்தபோது, கர்த்தர் அவர் மூலமாக கண்டித்து உணர்த்தினார். ஆனால் அவர்களோ அவரை எதிர்த்து நின்றார்கள். அவரோடு கூட பிறந்தவர்களும், பெற்ற தாய், தகப்பனும் கூட இந்த சகோதரனோடு கர்த்தர் இருந்ததை அறியாதிருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் கர்த்தரை தேடவில்லை. கர்த்தரை தேடாமல், அவரது வார்த்தையை தியானிக்காமல் இருந்ததால் கர்த்தரை குறித்த அறிவு அவர்களுக்கு இல்லாதிருந்தது. கர்த்தரை தேடாதவர்கள் நியாயத்தைப் பற்றி புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆனால், கர்த்தரை நேசிப்பவர்களோ சலகத்தையும் புரிந்து கொள்வார்கள்.

> உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்.
>
> - *யோவான் 17:17*

வேத வசனமே சத்தியம். அந்த வேத வசனத்தால் பிதா நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். ஆதலால் வேதத்தை தியானிப்பது அவசியம். வேத வசனம் நம்மை தூய்மையாக்கும். நம்மிடமுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி நம்மை சரி செய்து, குறைவுகளை நம்மைவிட்டு நீக்கி நம்மை பரிசுத்தம் செய்கிறது.

## நியாயம் செய்யும் தேவன்

> அப்பொழுது அவர் நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும், உணராமலும், கண்ணாரக் கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்.
>
> - *ஏசாயா 6:9*

நல்ல மனிதன் நியாயமான காரியங்களை செய்கிறவனாகவும், பொய் பேசாமல் உண்மையையே பேசுகிறனவாகவும் இருப்பான். நாம் ஒவ்வொருவரும் அப்படியாக இருக்கவேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தர் சொல்லும் வார்த்தைகளை அநேகர் அசட்டை செய்து, கண்கள் இருந்தும், காணாமலும், காதுகள் இருந்தும்



கேளாமலும் இருக்கிற அறிவில்லாத ஜனங்களாக, முரட்டாட்டமும், கலகமுமான இருதயமுள்ளவர்களாக இருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக எப்பொழுதும் திட்டங்களை தீட்டுகிறார்கள். கர்த்தருக்கு பயப்படும் பயம் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் இருதயம் கபடங்களால் நிறைந்திருக்கிறது. இவர்கள் துன்மார்க்கனுடன் சேர்ந்து, அவர்களது பாவங்களை கண்டித்து உணர்த்தாமல் இருக்கிறார்கள். திக்கற்ற, ஏழை, எளிய ஜனங்களின் தேவைகளை ஏற்ற வேளையில் சந்திக்காமல், அவர்களின் கஷ்டங்களை உணர்ந்து கொள்ளாமல், அவர்களுடைய வழக்கை விசாரியாமல், சுயநலத்தோடு தாங்கள் மாத்திரம் நன்றாய் வாழ்கிறார்கள். எளியவர்கள் நியாயமான தீர்ப்பை பெறவிடாமல் தடை செய்கிறார்கள். பிரியமானவர்களே, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் வார்த்தையை அவமதித்தால் நம்மேல் தண்டனை வரும். அவர்களின் சொற்களை அவமதிக்காதீர்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக அல்ல. பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்கிறவர்கள். இவர்கள் கர்த்தருடைய வழியையும் அவருடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள். தாங்கள் செய்த தவற்றிற்கு மனம் வருந்தாமல், தங்கள் இருதயத்தை இன்னும் கடினமாக்கிக் கொண்டார்கள்.

## வார்த்தையை தியானிப்பதால் வரும் மேன்மை

> உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிற படியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ள வனாயிருக்கிறேன்.
>
> - *சங்கீதம் 119:100*

தேவனுடைய வார்த்தை, நம்மை விவேகமுள்ளவர்களாக உருவாக்குகிறது. நாம் பகுத்தறிவையுடையவர்களாகவும், சரியான தீர்ப்பை சொல்லக்கூடியவர்களாகவும், சரியான முடிவை எடுக்கக்கூடியவர்களாகவும் நம்மை மாற்றும். முதியோர்களுக்கு இந்த உலகத்தில் பல அனுபவங்கள் இருக்கும். ஆனால் தேவனுடைய வார்த்தையானது, நம்முடைய சத்துருக்களைக் காட்டிலும், நமக்கு போதித்தவர்களைக் காட்டிலும், முதியோர்களைக் காட்டிலும், நம்மை ஞானமுள்ளவர்களாக மாற்றுகிறது. உலக அறிவுள்ளவர்களும், அனுபவமுள்ள வர்களும் ஞானமுள்ளவர்களல்ல. ஞானம் தேவனிடத்திலிருந்துதான் வரும். தேவனுக்கு இடங்கொடுத்து, அவருடைய வார்த்தையின்படி நாம் நடக்கவேண்டும்.

கர்த்தரை தேடுகிறவர்கள், அவருடைய கட்டளைகளின்படி நடப்பதால் வயதில் முதியவர்களைக் காட்டிலும், ஞானமுள்ளவர்களாயிருப்பார்கள். ஒரு காரியத்தை எளிதாக புரிந்து கொள்ளும் அறிவுக்கூர்மையை உடையவர்களாயிருப்பார்கள். கர்த்தருடைய வழிகளை புரிந்து கொண்டு

அதன்படி நடப்பார்கள். கர்த்தருடைய பார்வையில் எல்லாவற்றையும் பார்த்து, தீய மனிதர்களின் பொல்லாத வழியை உணர்ந்து கொண்டு, அவர்களுடைய வழிக்கு தங்களை விலக்கி பாதுகாத்துக் கொள்வார்கள். அவர்கள் கர்த்தரை நேசிப்பதனால், வார்த்தையை ஏற்றுக் கொண்டு, அதற்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக் கொடுப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையை கேட்பதற்கும், பேசுவதற்கும் எப்பொழுதும் தயாராக இருப்பார்கள்.

இரவும், பகலும் வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் வேதத்தில் பிரியமாயிருக்கிறவன் தேவனை நேசிப்பான். அவன் மனந்திரும்பி, இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக் கொண்டு, நீதியோடும், நியாயத்தோடும், பரிசுத்தத்தோடும் வாழுவான். அவன் வேதத்தை வாசிப்பதிலும், தியானிப்பதிலும், அதிலுள்ள சத்தியங்களை கேட்பதிலும், அதன்படி நடப்பதிலும் வாஞ்சையோடிருப்பான். கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் தொடர்ந்து நிலைத்திருந்து வாழும்போது, நாம் ஞானத்தில் வளரலாம். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். நம்முடைய வாழ்க்கையில் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து, அவரை கனப்படுத்தி, வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அது உண்மையான ஞானத்தைப் பெற வழிநடத்தும். ஞானமுள்ளவர்கள் தீமையான வழியில் செல்பவர்களை எளிதில் கண்டுகொள்ளும் திறனையுடையவர்களாக இருப்பார்கள். தீய நோக்கத்தோடுகூட வரும் மனிதர்களை எளிதாக கண்டுபிடிக்கும் ஆற்றலையுடையவர்களாக இருப்பார்கள்.

ஒரு காரியத்தை சரியாக சிந்தித்து செயல்படும் திறனையும் நிதானமுள்ள தெளிந்த புத்திக்கூர்மையையும் தருவதுதான் ஞானம். நாம் ஞானத்தை விரும்பி, அதை தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்ளவேண்டும். சாலொமோன் ராஜா, தேசத்தை ஆள கர்த்தரிடமிருந்து ஞானத்தையும், உணர்வுள்ள இருதயத்தையும் தாரும் என்று கேட்டு பெற்றுக் கொண்டான். கர்த்தருடைய வார்த்தையின் மூலமாகத்தான் ஞானம் நமக்குள் வரும். நாம் ஞானத்தில் வளரவேண்டுமானால், தேவனை நம்பி, அவரை கனப்படுத்தி, வேத வார்த்தைகளை வாசிக்க வேண்டும். இவற்றின் மூலம் ஞானம் வெளிப்படும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம், தவறு செய்யும்போது, ஏன் இந்தத் தவறுகளை செய்தோம் என்பதை உணர்ந்து, அவற்றிலிருந்து நாம் மனந்திரும்பி நம்மை சரி செய்து கொள்ள வேண்டும்.

குறைந்த அறிவுள்ளவர்களை மூடன் என்று உலகம் கூறுகிறது. ஆனால், தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று எண்ணி, சுய இஷ்டம்போல் கட்டுப்பாடுகளை மீறி, பெரியவர்களின் ஆலோசனையை அற்பமாக எண்ணி, அசட்டை செய்து, தான் செய்வதுதான் சரி என்று சாதித்து, கற்றுக் கொள்ள முன்வராதவனை மூடன் என்று வேதம் கூறுகிறது.



கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடுகூட தொடர்ந்து வாழும்போது, ஒருவரிடமுள்ள குற்றங்களை கண்டித்து உணர்த்தி, கர்த்தருடைய வழிகளை கற்றுக் கொடுத்து, கர்த்தருக்கு நேராக வழிநடத்தி, தகுந்த ஆலோசனைகளை கூறி, தாழ்மையோடும், அடக்கத்தோடும் நடந்து கொள்வார்கள். மற்றவர்களைவிட தாங்கள் சிறந்தவர்கள் என்று எண்ணமாட்டார்கள். இப்படிப்பட்ட குணங்களையுடையவர்களே அறிவுள்ளவர்கள். எல்லாவற்றையும் புரிந்து கொள்ளும் திறனுடையவர்கள். கர்த்தர் ஞானத்தைக் கொடுக்கிறார். அவரது வாயிலிருந்து அறிவும், புரிந்து கொள்ளுதலும் வரும்.

> **ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.**
>
> *- 1 கொரிந்தியர் 2:15*

பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டவன் எல்லாவற்றையும் அடையாளம் கண்டு கொள்வான். ஒருவரது வார்த்தைகளும் செயல்களும் நோக்கமும் சரியானதா இல்லையா என்பதை ஆவிக்குரியவன் எளிதாக அறிந்து கொள்வான். அவனுடைய அறிவுக்கு எட்டாததை கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு வெளிப்படுத்துவார். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுபவன் ஒவ்வொரு காரியத்தையும் வேறுபடுத்தி தெளிவாக அறிந்து கொள்வான். எல்லா காரியங்களையும் சோதித்து, விசாரித்து, விபரீதங்களை கண்டுபடித்து ஆராய்ந்து செயல்படுவான். அநீதியாக மனிதர்கள் நடந்து கொள்வதையும், காரியத்தில் உள்ள சிக்கல்களையும், பிரச்சனைகளையும், மனிதர்கள் உள்ளத்தில் உள்ள எண்ணங்களையும் வேறுபடுத்தி காண்பிப்பான். வருங்காலத்தில் நடக்கும் காரியங்களையும் தெளிவாக அறிந்து கொள்வான். அவன் எல்லாவற்றைப் பற்றியும் நியாயந்தீர்க்க முடியும். மற்றவர்கள் அவனை நியாயந்தீர்க்கமுடியாது. ஆவிக்குரிய மனிதன் ஜென்மசுபாவமுள்ள மனிதர்களின் தவறுகளை சுட்டிக்காட்டி அவர்களை மனந்திரும்புவதற்கு முயற்சிப்பான். ஆனால், ஆவிக்குரிய மனிதனை குற்றஞ்சாட்டவோ, எதிர்த்து நிற்கவோ உலக ஞானத்தில் நிறைந்த மனிதனால் முடியாது. தேவன் கொடுக்கும் இந்தஞானம் இவ்வுலகத்திலிருந்து வருவதல்ல. தேவனுடைய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களுக்கு, தேவன் ஆவியானவர் மூலமாக ஞானத்தைக் கொடுக்கிறார். ஆவியானவர் எல்லாவற்றையும் அறிவார். ஒரு மனிதன் மற்ற மனிதருடைய எண்ணங்களை அறியமுடியாது. தேவனுடைய ஆவியானவர்தான் அந்த எண்ணங்களை அறிவார். தேவ ஆவியை பெற்றுக் கொள்ளாத (ஜென்ம சுபாவமுள்ள) மனுஷன் தேவனுடைய ஆவியானவரிடமிருந்து வரும் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளமாட்டான்; புரிந்து கொள்ளவும் மாட்டான். ஆனால், ஆவிக்குரியவனே எல்லாவற்றையும் புரிந்து கொள்வான்.

யோசேப்பு தேவ ஆவியை பெற்றவனாயிருந்தான். யோசேப்புக்குள் தேவனுடைய ஆவி இருந்ததை பார்வோன் கண்டு கொண்டான். தேவன்தான் தம்முடைய ஞானத்தை அவனுக்கு தந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டான். பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டான். இந்த சொப்பனத்திற்கான அர்த்தத்தை, அந்த தேசத்திலுள்ள ஞானிகளாலோ, மந்திரவாதிகளாலோ விளக்க முடியவில்லை. ஆனால், யோசேப்போ, சொப்பனத்தைத் தருவதும், அதற்கு அர்த்தம் சொல்லுகிறதும் கர்த்தரே நான் அல்ல என்று சொல்லி, சொப்பனத்திற்கான அர்த்தத்தைச் சொன்னான். அந்த சொப்பனத்தில், கர்த்தர் தாம் செய்யப் போகிறதை பார்வோனுக்கு அறிவித்தார். எகிப்து தேசத்தில் வரப்போகும் பரிபூரணமான விளைச்சலையும், பஞ்சத்தையும் முன்கூட்டியே சொப்பனத்தில் காண்பித்தார். யோசேப்பு சொப்பனத்திற்கான விளக்கத்தையும் சொன்னது மட்டுமல்ல, பரிபூரணமான விளைச்சலின் காலத்தில் தானியத்தை பத்திரப்படுத்தி சேமித்து வைக்கவும், பஞ்ச காலத்தில் ஜனங்களை பராமரிக்கவும் விவேகமும், ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத்தேடி, அவனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக ஏற்படுத்தும்படியாக கூறினான். (ஆதியாகமம் 41:33). அப்பொழுது பார்வோன், இவையெல்லாவற்றையும் தேவன் யோசேப்புக்கு வெளிப்படுத்தினார்; தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்று கூறி, யோசேப்பை பார்வோன் எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான்.





பாருங்கள் சிறுபிராயமுதல் யோசேப்பு கர்த்தரை தேடுகிறவனாய் இருந்தான். பல சோதனைகள், போராட்டங்களின் போதும், அநியாயமாய் பழிசுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோதும், யோசேப்பு பொறுமையோடு, கர்த்தர் தனக்கு கனவில் காண்பித்தவைகள் நடக்கும் என்று விசுவாசத் தோடு,



பொறுமையோடு காத்திருந்தான். கர்த்தர் யோசேப்போடேகூட இருந்ததினால், பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தத்தை சொல்ல வைத்து அவனை உயர்த்தினார். கர்த்தர் தம்மை தேடுகிறவர்களுக்கு, சகல காரியங்களையும் வெளிப்படுத்தி, அவர்களுக்கு பலனளிக்கிறவராய் இருக்கிறார். பிரியமானவர்களே, நான் கர்த்தரை தேடுகிறேன் ஒரு நன்மையும் எனக்கு கிடைக்கவில்லையே, மனிதர்கள் வீணாய் என்மேல் பழிசுமத்துகிறார்களே, செய்யாத காரியங்களை செய்ததாகவும் சொல்லாதவற்றை சொன்னதாகவும் சொல்கிறார்களே என்று கலங்காதிருங்கள். நிச்சயமாக கர்த்தர் உங்களை உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக, உங்களை பகைக்கிறவர்களுக்கு முன்பாக, உங்களை வெட்கப்படுத்தினவர்களுக்கு முன்பாக உயர்த்துவார். ஒருபோதும் சோர்ந்து போகாதீர்கள். யோசேப்போடு கூட இருந்த கர்த்தர், உங்களோடு கூட இருக்கிறார். யோசேப்பை பகைத்த அவனது சகோதரர்களை அவன் காலடியில் விழச் செய்து அவர்களுக்கு முன்பாக அவனை உயர்த்தினார்.

**எதைக் குறித்தும், யாரைக் குறித்தும் கவலைப்படாதிருங்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களோடிருக்கிறார்.**

அப்படிப்போல உங்களையும் கர்த்தர் உயர்த்துவார். தம்மைப்பற்றி அறிந்தவர்களுக்கும், அறியாதவர்களுக்குள்ள வித்தியாசத்தை கர்த்தர் காண்பிப்பார். எதைக் குறித்தும், யாரைக் குறித்தும் கவலைப்படாதிருங்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களோடிருக்கிறார்.

◈◈◈

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**

# பில் வின்ஸ்டன்



❐ தேவனுடைய வார்த்தை நம்முடைய சிந்தனையை மாற்றியமைத்து, நம்முடைய குணாதிசயங்களை உருமாற்றி, நம்மை இயேசுவைப் போல உள்ளும், புறமும் ஆக்கிவிடும்.

❐ நாம் புதிதாய் கர்த்தருக்குள் பிறக்கும்போது, எப்படி ஒரு பழைய கட்டிடத்தை புதிதாக்குகிறோமோ, அதேபோல்தான் நம்மில் மாற்றம் ஏற்படுகிறது. அதே கட்டிடம்தான், ஆனால் எல்லாம் புதிதாக மாற்றப்பட்டுள்ளன. அதேபோல்தான் நமக்கும், அதே பழைய சரீரம்தான், ஆனால், உள்ளான மனிதனின் எண்ணங்கள், சிந்தனைகள், குணங்கள் எல்லாம் மாற்றப்பட்டுள்ளன.

❐ பழைய மனுஷன் - தனக்காக வாழ்ந்தான். அவனுடைய உணர்ச்சிகளின்படியும், நினைவுகளின்படியும் வாழ்ந்தான். அது தாழ்வானதொரு வாழ்க்கை. புதிய மனுஷன் - இயேசுவுக்காக வாழ்கிறான். வேதத்தின் வார்த்தைக்கேற்ப வாழ்கிறான். இதுதான் ஆவிக்குரிய வாழ்க்கை. மேலானதொரு வாழ்க்கை.

❐ நமக்கு பழைய வாழ்க்கையைப் பற்றிய நினைவுகள் இருக்கும். ஆனால், அதன்படி வாழ முற்படமாட்டோம்.

❐ சாத்தான், நமது சிந்தனையைத்தான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறான். கர்த்தர் நமக்கு சிந்தனையை, கற்பனைத் திறனைக் கொடுத்திருப்பது ஒரு நோக்கத்திற்காக. நம்மோடு அவர் தொடர்பு கொள்வதற்காகவே கற்பனைத் திறனை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் ஏற்கெனவே கிடைத்த அனுபவங்களுக்கு அப்பாற்பட்டக் காரியங்களையும், நம் கண்ணெதிரே நடக்கும் நிகழ்வுகளுக்கும் அப்பாற்பட்டக் காரியங்களையும், நாம் இதுவரை நினைத்தேப் பார்த்திராத காரியங்களையும் நம்மோடு பகிர்ந்து கொள்ளவே நமக்குக் கர்த்தர் கற்பனைத் திறனை கொடுத்திருக்கிறார்.

❐ நாம், நமது சிந்தனைகளை சாத்தானுக்கு ஏற்றவாறும் பயன்படுத்தலாம், கர்த்தருக்கு ஏற்றவாறும் பயன்படுத்தலாம். நமது சிந்தனையில் எப்படிப்பட்ட காரியங்களை வைக்கப் போகிறோம் என்பது நம்மிடத்தில்தான் இருக்கிறது.

www.bwm.org
www.billwinstonministries.org



❐ சாத்தானால் நமக்குள் ஒரு சிந்தனையை உருவாக்க முடியாது. கர்த்தர் நமக்கு தந்த சிந்தனையை வளைத்து, நெளித்து தந்திரமாக, சூழ்ச்சியாக, அழிவுக்குரியதாக மாற்றிப் போடுவான்.

❐ உங்களைக் குறித்த தரிசனம் முக்கியம். நீங்கள் பார்க்கமுடியாத இடத்திற்கு, உங்களால் செல்ல முடியாது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கர்த்தருடைய வார்த்தையை நன்கு தியானித்ததினால் உறுதியான விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. அக்கினியிலிருந்தும் கர்த்தர் தங்களை விடுவிப்பார் என்ற விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. யோசேப்புக்கு தரிசனத்தை கர்த்தர் சொப்பனம் மூலமாகக் கொடுத்தார். எவ்வளவோ ஏற்ற, இறக்கங்கள் அவன் வாழ்க்கையில் வந்தாலும் கர்த்தர் தந்த தரிசனம் அவன் வாழ்க்கையில் நிறைவேறினது. நம் மனக்கண்ணால் (சிந்தனையில்) தேவனுடைய வார்த்தை தரும் தரிசனத்தை நாம் காண வேண்டும். அப்படி நம்மைக் குறித்த தரிசனத்தை நாம் சிந்தனையில் காணும்போது நிச்சயமாக அதை அடைவோம்.

❐ கர்த்தருடைய வார்த்தை, உங்களுடைய எதிர்காலத்தைக் குறித்து சொல்வதெல்லாம் பெரியதாக இருக்கும். உங்களது சூழ்நிலை, ஆற்றல் எல்லாம் அதற்கு சாதகமாக இருக்காது. அது கர்த்தருக்குத் தெரியும். அதற்காகத்தான் விசுவாசம். அந்த விசுவாசத்தை உங்களுக்குத் தரும் தேவனுடைய வார்த்தை.

❐ உங்களை கர்த்தருடைய வார்த்தையை விட்டுப் பிரித்து எடுத்தால்தான் சாத்தானால் எதுவும் செய்ய முடியும். உங்களிடம் பொய் சொல்லுவான், திசை திருப்புவான், ஆசையை உண்டுபண்ணுவான் - இவையெல்லாம் கர்த்தருடைய வார்த்தை உங்களில் (இருதயத்திலும், சிந்தையிலும்) ஏற்படுத்தும் மாற்றத்தைத் தடுக்கவே.

❐ தேவனுடைய ராஜ்யம் என்பது நமக்குள் இருப்பது. அதன் பலனை நாம் பெறவேண்டுமென்றால், அதற்கே உரிய சட்ட திட்டங்களை அறிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும். அதற்காகவே தேவனுடைய வார்த்தை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகம் வேறு, தேவனுடைய ராஜ்யம் வேறு.

❐ இந்த உலகம் சாத்தானுக்கு சொந்தமானதல்ல, நமக்கு சொந்தமானது. இதை சுதந்தரித்துக் கொள்ள சில சோதனைகளை நாம் மேற்கொண்டாக வேண்டும். அந்த பெலத்தை கர்த்தர் தருவார். தேவ தூதர்களை நமக்கு உதவி செய்ய அனுப்புவார்.

❐ தற்போதுள்ள உலகமும் அதன் அமைப்பும் தோல்வியடைந்து கொண்டிருக்கிறது. ஆனால், தேவனுடைய ராஜ்யத்தைத் தங்களுக்குள் வைத்திருப்பவர்களுக்கு தோல்வி என்பது கிடையாது. ஏனென்றால் அவர்கள் வாழ்வது இந்த உலகத்தின் அமைப்பின்படி அல்ல. அவர்கள் வாழ்வது தேவனுடைய ராஜ்யத்தின் அமைப்பின்படியே. சாத்தான், இந்த உலகத்தின் அமைப்பை நம்பச் சொல்லுவான்.

❐ தேவனுடைய ராஜ்யத்தின்படி வாழ்வது என்பது தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதாகும். வெளியே உள்ள உலக அமைப்பின்படி வாழ்வது தேவனுடைய ராஜ்யமல்ல. தேவனுடைய ராஜ்யத்தின்படி வாழ்பவர்கள், இருளிலுள்ள ஜனங்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுபவர்கள்.

❐ தேவனுடைய ராஜ்யத்தையே நாம், பக்கத்து வீட்டுக்காரர்களிடமும், நம்முடன்கூட வேலை பார்ப்பவர்களிடமும், நண்பர்களிடமும் பகிர்ந்துகொள்ளவேண்டும். இந்த உலக அமைப்பு சரிந்து கொண்டிருக்கிறது. அதினால் அவர்களும் இந்த அழிவிலிருந்து தப்பித்து தேவனுடைய ராஜ்யத்துக்குக் கடந்து வரலாம்.

◈◈◈



# இயேசுவின் நாமமும் ஜெபமும்

5

பால்ராஜ் கென்னடி

... மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.

இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.

அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக் கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

*- யோவான் 16:23,24,26*

இங்கே, இயேசு கிறிஸ்து, பிதாவிடம் நாம் எப்படி கேட்கவேண்டுமென்று சொல்லி கொடுக்கிறார். விசேஷமாக தம்முடைய நாமத்தின் மேன்மையை குறிப்பிட்டு சொல்கிறார். அப்படியென்றால் நாம் ஜெபிக்கும்போது, அவருடைய நாமத்தை சொல்லி ஜெபிக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி நாம் பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, நமது சந்தோஷம் முழுமையாய் நிரம்பும்படி பெற்றுக் கொள்வோம் என்று வாக்கு கொடுக்கிறார். மற்றொரு காரியம், அப்படி நாம் அவருடைய நாமத்தைச் சொல்லி ஜெபிக்கும்போது அவரும், நமக்காக பிதாவினிடத்தில் கேட்கிறார். ஏன் நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்க வேண்டும்? அப்படி என்ன சிறப்பும், முக்கியத்துவமும் அவருடைய நாமத்தில் இருக்கிறது?



நம் எல்லோருடைய பாவங்களையும் அவர் சுமந்தார். நமக்காக அவர் அடிக்கப்பட்டார், காயப்பட்டார், நொறுக்கப்பட்டார். நாம் செய்த பாவங்களுக்காக அவர் சிலுவையிலே அடிக்கப்பட்டு, இரத்தம் சிந்தினார். அவருடைய இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டோம். நாம், நம்முடைய கிரியைகளினாலல்ல, அவராலே நீதிமான்களானோம். அவராலே நீதிமான்களானதினாலே, அவருடைய நாமத்தைச் சொல்லி, பிதாவினிடத்திலிருந்து பரலோகத்து, பூலோகத்து ஆசீர்வாதங்களைக் கேட்கிறோம். நாம் எல்லோருமே அவருக்குள் இருக்கிறோம். நாம் எல்லோரும் இயேசு கிறிஸ்து மூலமாய் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். அவரில்லாமல் நாமில்லை. அவர்தான் நம்முடைய மீட்பர், இரட்சகர். அவருக்கே சகல அதிகாரமும் உண்டு.

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

*- பிலிப்பியர் 2:8-11*

இங்கே, அப்போஸ்தலனாகிய பவுல், இயேசு கிறிஸ்துவின் நாமத்தையும், அதன் மேன்மையைக் குறித்தும் விவரித்துச் சொல்லுகிறான். தேவனின் ரூபமாயிருந்தும், தம்மை தாழ்த்தி ஒரு மனுஷனுடைய ரூபமெடுத்து இந்த பூமிக்கு வருகிறார் இயேசு கிறிஸ்து. தேவனுடைய ராஜ்யத்தின் நீதியின்படி, தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற நீதியின்படி எல்லோருக்கும் மேலாக அவர் உயர்த்தப்படுகிறார். இப்போது வானத்திலுள்ளோர், பூமியிலுள்ளோர், பூமியின் கீழானோர் எல்லோரும் அவருக்குக் கீழாக வருகிறோம். மனுஷன் எந்த பாவத்தினால் எல்லாவற்றையும் இழந்து போனானோ, அவற்றையெல்லாம் மீட்டுத் தருவதற்காகவே இப்படிப்பட்ட அதிகாரத்தை எடுத்தார். மனிதர்களாகிய நாம் பாவத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தோம். பாவத்தின் சம்பளம் மரணம். அதற்காக பாவமில்லாத அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டெடுத்தார். இந்த மீட்புதான் பெரிய ஆசீர்வாதம். அதற்கும் மேலாக, மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுத்தர அவர் வாஞ்சிக்கிறார். அதற்குத் தேவையான அதாவது பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளத் தமது நாமத்தையும் (அதின் அதிகாரத்தை) நமக்குத் தருகிறார். சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டது. அதினால் நாம் தைரியமாக அவருடைய நாமத்தைச் சொல்லி பிதாவினிடத்தில் கேட்கலாம்.

ஜெபிக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி ஜெபிக்க மறவாதிருங்கள்.

◈◈◈